தமிழ்நாடு பள்ளிக்கல்வி ஆணையரின் செயல்முறைகள், சென்னை – 600006

ந.க. எண்.50373/டபிள்யு3/இ3/2021 நாள். 30 .11.2021

பொருள்: பள்ளிக்கல்வி – தமிழ்நாடு மேல்நிலைக்கல்விப்பணி – 2020–21ம் கல்வியாண்டில் அரசு / நகராட்சி மேல்நிலைப்பள்ளி காலியாக உள்ள முதுகலைப்பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களை – பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் மூலம் தற்காலிகமாக நிரப்பிக் கொள்ள அனுமதி அளித்தல் – சார்பு.

பார்வை:
1. அரசாணை(1டி) எண். 226, பள்ளிக்கல்வித்(பக2(2) துறை, நாள்.24.11.2021.
2. இவ்வாணையரக செயல்முறைகள் இதே எண். நாள்.26.11.2021

********

அரசு / நகராட்சி மேல்நிலைப்பள்ளிகளில் காலியாக உள்ள முதுகலை ஆசிரியர் பணியிடங்களை மாணவர்கள் நலன் கருதி பெற்றோர் ஆசிரியர் கழகம் மூலம் ஒப்பந்த அடிப்படையில் 2774 பணியிடங்களை நிரப்பிக்கொள்ள அரசால் அனுமதித்து அரசாணை வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து மேற்காண் அரசாணையின்படி காலியாக உள்ள பணியிடங்களுக்கு மட்டும் முதுகலை ஆசிரியர் பணியிடங்களை ஒப்பந்த அடிப்படையில் 04.12.2021–க்குள் அறிக்கை அனுப்புமாறு அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்களுக்கும் பார்வை 2.ல் காண் செயல்முறைகளின் தெரிவிக்கப்பட்டது.

அரசு / நகராட்சி மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் கல்வி நலன் கருதி இவ்வாணை வெளிடப்பட்டுள்ளதால் இப்பொருள் தொடர்பாக கீழ் காண் நெறிமுறைகளை பின்பற்றி எவ்வித புகாருக்கும் இடமளிக்காமல் துரிதமாக செயல்பட்டு தக்க நடவடிக்கை மேற்கொள்ள அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

1. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இணைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்த பணியிடத்திற்கு மேல் எக்காரணத்தைக் கொண்டும் நியமனம் செய்யக் கூடாது.

2. பணியிடங்கள் காலியாக உள்ள பள்ளிகளுக்கு மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்ட பணியிடங்களை அந்தந்த முதன்மைக்கல்வி அலுவலர்கள் பகிர்ந்தளிக்க வேண்டும்.
3. தற்போது ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பாடத்திற்கான பணியிடங்களில் அரசாணையில் உள்ள பாடத்திற்கு மட்டும் தேவைகேற்ப பாட மாற்றம் செய்து தேவையுள்ள பள்ளிக்கு மாற்றம் செய்து நியமனம் செய்து கொள்ளலாம்.

   (உதாரணமாக– பொருளியல் பாடத்திற்கு 4 பணியிடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆனால் 1 பணியிடம் மட்டுமே தேவை. அதே போன்று கணிதப்பாடத்திற்கு 1 பணியிடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆனால் 4 பணியிடங்கள் தேவை எனில் தேவையற்ற 3 பொருளியல் பாடத்திற்கு பதிலாக கணித பாடமாக மாற்றம் செய்து தேவையுள்ள பள்ளிகளுக்கு வழங்கலாம்)

   இந்த 3 பொருளியல் ஆசிரியர்கள் கணிதம் ஆசிரியர்களாக மாற்றம் செய்து தேவையுள்ள பள்ளிகளுக்கு வழங்கலாம்)
4. மேற்காண் செலவினம் அரசாணையில் குறிப்பிட்டுள்ள கணக்கு தலைப்பில் மட்டுமே மேற்கொள்ளவேண்டும்.
5. தற்காலிக அடிப்படையில் நியமனம் செய்யப்படும் நபர் நியமனம் செய்யப்படும் பாடத்தில் முதுகலை ஆசிரியர் பதவிக்குண்டான கல்வித் தகுதியை பெற்றிருக்க வேண்டும்
6. பெற்றோர் ஆசிரியர் கழகம்மூலம் நியமனம் செய்யப்படும் ஆசிரியர்கள் எவ்வித புகாருக்கும் இடைமளிக்காதபடி பணிகளை மேற்கொள்ள அறிவுறுத்தப்படவேண்டும்.
7. அரசுப்பெண்கள் மேல்நிலைப்பள்ளிகளில் காலியாக உள்ள பணியிடங்களுக்கு கூடுமானவரை பெண் ஆசிரியரையும், ஆண்கள் மற்றும் இருபாலர் பயிலும் பள்ளிகளில் ஆண் மற்றும் பெண் ஆசிரியர்களை நியமனம் செய்து கொள்ளலாம்.

இணை இயக்குநர் (மேநிக).

30/11/21

30/11/21

**பெறுநர்:**

அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்கள்.